**DP/GIT/2023/01**

எனது எண்: 6/32/GIT/2023,2024(2024)
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2024. ஜூலை.

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை – 2023(2024)இ(2024)

மேற்படி வருடங்களுக்குரிய பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் உரிய பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் இத்துடன் அனுப்பி வைத்துள்ளேன். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2024 ஜூலை மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூலை மாதம் 29 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது.

2. **முறைமைக்குள் (System) நுழைதல்**

(அ) விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து "எமது சேவை" என்பதின் கீழுள்ள "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" ஐ Click செய்த பின்னர் GIT – 2023,2024(2024) Student Registration (School) Click செய்வதன் மூலமோ அல்லது
- பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" ஐ Click செய்த பின்னர் GIT – 2023(2024),2024. Student Registration (School) Click செய்வதன் மூலமோ அல்லது
- https://onlineexams.gov.lk/eic ஐ Click செய்து நுழைக.

(ஆ) கிடைக்கப்பெறும் window இல் School Account Login இல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள School Code, Password ஐ உள்ளடக்கி முறைமைக்குள் நுழைக. (உங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்ட School Code, Password தொலைத்திருப்பின் உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்க.)

3. இவ்வருடங்கள் நான்கிற்கும் நிகழ்நிலை முறைமையில் (online) ஒரு தடவை மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அந்தந்த வருடங்களுக்காக தனித்தனியாக விண்ணப்பங்களை விண்ணப்பிப்பதற்கு கணினி தரவு முறைமையில் ஒவ்வொரு வருடங்களுக்கும் தனித்தனியாக தயாரிக்கப்பட்டுள்ளது. வருடங்களுக்கமைய மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் வசதிக்காக பின்வரும் விடங்களில் உங்கள் கவனத்தை செலுத்தவும்.

★ 2024 ஆம் ஆண்டு (தரம் 12) – 2025 ஆண்டில் முதற்தடவையாக தோற்றவுள்ள க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள்.

★ 2023 ஆம் ஆண்டு (தரம் 12) – 2024 ஆண்டில் முதற்தடவையாக தோற்றவுள்ள க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள்.

★ 2022 ஆம் ஆண்டு (தரம் 12) – 2023 ஆண்டில் க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றி 2023 இல் நடைபெற்ற GIT பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாமல்போன விண்ணப்பதாரிகள்.
(2022 ஆம் ஆண்டு தரம் 12 இல் கல்வி கற்று, 2023 ஆம் ஆண்டு GIT பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பமில்லை).

4. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது பிழையின்றி குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட நகர எண்ணையோ பாட எண்ணையோ எக்காரணத்திற்காகவேனும் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனால் முதற் சந்தர்ப்பத்திலேயே இவற்றைப் பிழையின்றிப் பூரணப்படுத்துதல் அதிபரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

5. நிகழ்நிலை முறைமையில் பூரணப்படுத்தி அச்சுப் பிரதியெடுத்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களும் சரியானவையா என உறுதிசெய்து மாணவரிடம் கையொப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும். அதிபரும் கையொப்பமிட்டு பாதுகாப்பாக பாடசாலையில் வைத்துக் கொள்வதுடன் நிகழ்நிலை

முறைமையில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் பிரதியிலுள்ள சகல தகவல்களும் சரியானவையென பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6. உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு மற்றும் வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதாயின் அவர்களுக்காக Special Education Needs Students' Additional Data இணைப்பில் (Link) வழங்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களுக்காக பொருத்தமான வசதிகளுடன் இரத்மலானை, தங்காலை (பொலம்மாறுவ) இடங்களில் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமாகையால் அந்நிலையத்தில் மாணவர்களுக்கு தோற்றுவதற்கு இடமளிக்க முடியும்.

7. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :

இப்பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தத்தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்தின்போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரமே சமர்ப்பிக்கலாம். வேறு எந்த ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகையினால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.

I. இப் பரீட்சையின் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துதல் தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் மேலதிகமாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் - 011-2784208 / 011-2784537/ 011-2786616
தொலைநகல் இலக்கம் - 011-2784422
மின்னஞ்சல் முகவரி - gitexams24@gmail.com

II. தொழில்நுட்ப விசாரணைகள் (நிகழ்நிலை அலகு) 0113671568, 0113661122
மின்னஞ்சல் முகவரி : doeonlineexams@gmail.com

இது தொடர்பாக நீங்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கு மிக உயர்ந்த மதிப்பளிக்கின்றேன்.

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சை ஆணையாளர் நாயகம்

பிரதிகள் : 01. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் - த.அ.கொ
02. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் - த.அ.கொ

D:\New Volume\A\2023\GIT\Principal\DP-GIT-2023-1.doc